# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வழக்கு | : | OS.114/2020 | கிராமம் | : | பெரம்பலூர் |
| சாட்சி | : | சா.சா–1 | வட்டம் | : | பெரம்பலூர் |
| பெயர் | : | முருகானந்தன் | வயது | : | 34 |
| த/பெ | : | செல்வராஜ் | தொழில் | : | இளநிலை உதவியாளர், |

2026–ம் ஆண்டு மார்ச் 16–ஆம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.இசக்கிதுரை, இளநிலை உதவிளார் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

## முதல் விசாரணை

நீதிமன்றத்தில் இருந்து ஜெயங்கொண்டம் சார்பதிவாளர் அவர்களுக்கு அழைப்பாணை வந்ததன் பெயரில் ஜெயங்கொண்டம் சார்பாதிவாளர் அவர்களுக்கு பதிலாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். **சார்பதிவாளர் எனக்கு வழங்கிய அனுமதிக் கடிதம் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் எங்கள் அலுவலகத்தில் பதிவிற்காக தாக்கல் செய்யப்பட்டு 22.01.2018 ஆம் தேதி நிலுவை ஆவண எண்.P3/2018 நிலுவையில் வைக்கப்பட்டது. 06.02.2018 ஆம் தேதியில் புத்தக எண்.2 அடிப்படையில் நிலுவை ஆவணமானது மறுதலிப்பு செய்யப்பட்டது. உடையார்பாளையம் கிராமம், தட்டாரத்தெருவில் வசிக்கும் பழனியாண்டி மகன் காளிமுத்து அவர்கள் 19.12.2017 அன்று எங்கள் அலுவலகத்தில் தடை மனு எண்.14/2017 கொடுத்துள்ளார். அந்த மனுவில் அரியலூர் கூடுதல் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பெற்றதாக தெரிவித்து மனு சமர்ப்பித்துள்ளார். அந்த தடை மனுவின் நகலை கொண்டு வந்துள்ளேன். 06.02.2018–ல் இராமசாமி என்பவர் லோகநாதன் என்பவருக்கு

எழுதிக்கொடுத்து நிராகரிக்கப்பட்ட ஆவணத்தின் நகலை கொண்டுவந்துள்ளேன். அதற்கான மறுதலிப்பு உத்தரவையும் கொண்டு வந்துள்ளேன். **மறுதலிப்பு ஆவணம் சா.சா.ஆ.2 ஆகவும், 06.02.2018 தேதியிட்ட நிராகரிக்கப்பட்ட ஆவணம் சா.சா.ஆ.3 ஆகவும், 19.12.2017 தேதியிட்ட காளிமுத்து கொடுத்த தடை மனுவின் நகல் சா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** இராமசாமி என்பவர் அழகர் என்பவருக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தை பதிவு செய்துள்ளோம். **அந்த ஆவணத்தின் நகல் சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஒரு சொத்தை பொறுத்து ஆவணம் பதிவுக்கு வந்து நிராகரிக்கப்பட்ட பிறகு அதே சொத்தை பொறுத்து மீண்டும் பதிவுக்கு வரும்போது ஆவணங்களை பதிவு செய்வதற்கு முன்பு முந்தைய பதிவேடுகளை (புத்தகம் எண்.2) பார்த்து பரிசீலனை செய்த பின்பு தான் பதிவு செய்வோம் என்றால் சரிதான். பத்திரத்தை மறுதலிப்பு செய்த சார்பதிவாளர் பெயர் சு.சிவக்குமார். பத்திரத்தை பதிவு செய்த சார்பதிவாளர் பெயர் மூ.சிவனேசன். பொதுவாக ஒரு ஆவணம் பதிவுக்கு மறுக்கப்படும்போது அதில் இறுதி முடிவு ஏற்பட்ட பின்பு தான் அதே சொத்தை பொறுத்து வேறு ஒரு ஆவணத்தை பதிவு செய்வோம் என்றால் சரிதான். மறுதலிப்பு செய்யப்பட்ட ஆவணத்தை பொறுத்து இறுதி முடிவு ஏற்பட்டுள்ளதா என்றால் அதற்கான ஆவணங்கள் இல்லை. இராமசாமி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் S.A.No.318/2010, 319/2010 வழங்கப்பட்ட உத்தரவு நகலை கொண்டுவந்தள்ளேன். **அந்த உத்தரவு நகல்கள் சா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இராமசாமி என்பவர் அழகர் என்பவருக்கு 2 வதாக எழுதிக்கொடுத்த பத்திரத்தை பதிவு செய்தபோது மேற்படி உயர் நீதிமன்ற உத்தரவு இரத்து செய்யப்பட்டுள்ளதா என்றால் அதற்கான ஆவணத்தை பதிவு செய்யும்போது இணைத்துக் கொடுக்கவில்லை. நீதிமன்ற உத்தரவு இருக்கும்போது அந்த உத்தரவு குறித்து பதிவுதுறைத் தலைவர் சுற்றிக்கை

மற்றும் அரசாணை பின்பற்றி ஆவணங்களை பதிவு செய்ய வேண்டும். 2 வதாக பத்திரத்தை பதிவு செய்தபோது பதிவுதுறைத் தலைவர் சுற்றிக்கை மற்றும் அரசாணை பின்பற்றி ஆவணங்களை பதிவு செய்ததாக சார்பதிவாளர் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2 (FAC),
ஜெயங்கொண்டம்.